# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF COMMERCE (EXTERNAL) – 2007 / 2008 HELD IN AUGUST – 2008

## COM 23 – COMMERCIAL AND INDUSTRIAL LAW

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) ஓர் ஒப்பந்தத்தின் முக்கியமான கூறுகள் எவை?

(ஆ) தபால் விதிகளின்படி தபால் மூலமான ஏற்பில் கடிதமானது தபால் செய்யப்பட்டதும், பூரணமானதும் செயல் வினையுடையதுமான ஏற்பு நிகழ்ந்து விட்டதாகக் கொள்ளப்படுகின்றது. குறித்த கடிதமானது கொடைமுனைந்தவரைச் (Offeror) சென்றடைய முன்னர் ஏற்பவர் (Offeree) தனது ஏற்பை வாபஸ் பெற முடியுமென்று நீர் கருதுகிறீரா? விளக்குக.

02. (அ) எந்தெந்த சூழ்நிலைகளில் ஒரு கொடைமுனைவானது

(i) காலங்கடந்ததாகிவிடும் (lapse)
(ii) கைவாங்கப்படலாம் (revoked)

(ஆ) 'A' என்பவர் 'B' என்பவரை நோக்கி கொடைமுனைவு செய்து குறித்த கொடைமுனைவானது ஒரு வாரத்திற்குள் ஏற்புச் செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பாகக் கேட்டிருந்தார். ஆனால் 'B' ஒரு வாரத்தின் பின்பே தனது ஏற்பை அறிவித்திருந்தார். இதே வேளை 'A' என்பவர் குறித்த பொருளை வேறொருவருக்கு விற்று விட்டார். 'B' உமது ஆலோசனையை நாடுகின்றார். அவருக்கு ஆலோசனை வழங்குக.

03. (அ) "பங்குடைமை உடன்படிக்கையொன்று எழுத்திலிருக்க வேண்டிய அவசியமில்லை" இது தொடர்பில் விரிவான கட்டுரை வரைக. பொருத்தமான சட்ட ஏற்பாடுகள், தீர்க்கப்பட்ட வழக்குகள், சான்றுகள் காட்டப்பட வேண்டும்.

(ஆ) "பங்குகளைச் சாட்டுதல் மூலம் பெறுபவர் (assignee) பங்குடைமையின் பங்காளரல்ல." இக்கூற்றின் வலிதான தன்மையை விளக்குக.

04. உறுதிப்படுத்தல் முகவராண்மை ஒன்றில் காணப்படுகின்ற அதி முக்கிய தேவைப்பாடுகள் எவை? தீர்க்கப்பட்ட வழக்குகள் சான்றாகக் காட்டப்பட வேண்டும்.

05. (அ) 'ஒருவர் தன்னிடமுள்ள உரித்தைவிடச் சிறந்த உரித்தை இன்னொருவருக்குக் கையளிக்க முடியாது' பொருள் விற்பனைச் சட்டம் தொடர்பில் இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

(ஆ) 'செல்வழி நிறுத்தல் உரிமையை <u>(Stoppage in transit)</u>' ஒரு விற்பனையாளர் வாங்குனர் ஒருவருக்கு எத்தகைய சூழ்நிலைகளில் பயன்படுத்தலாம்?

06. (அ) 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் ஒரு கம்பனி எவ்வாறு கூட்டிணைக்கப்படலாம்?

(ஆ) கம்பனியொன்றின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது அச்சட்டப்பிரிவின்கீழ் எவ்வாறு மாற்றம் செய்யப்படலாம்?

07. (அ) துர்நடத்தை **(Misconduct)** காரணமாக ஒரு தொழிலாளியின் வேலை முடிவுக்குக் கொண்டுவரப்படலாம். துர்நடத்தை பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியம் **(EPF)** த்தில் இருந்து ஒரு தொழிலாளி தனது பணத்தினை எந்தெந்த சூழ்நிலைகளில் பெற்றுக்கொள்ளலாம்?

08. சிறுகுறிப்பெழுதுக.

(அ) பராயமடையாதவர்களுடான ஒப்பந்தம்
(ஆ) தீங்கும், குற்றவியல் தவறும்

***